அசல்

2.5.1942 சா. சாமிநாதன்

அசல் - 1

உ 2-5-1942

*Sanmarga Sabah,*
MELASIVAPURI.
PUDUKOTAH

ஸ்ரீ. வே. சுந்தரராமையரவர்கள்,
திருக்கழுக்குன்றம்.

அன்புள்ள ஐயா,

தங்கள் தமையனாரும் தமிழ்த் தாயின் தவப்புதல்வரும் ஆகிய மகாமகோபாத்தியாய டாக்டர் சாமிநாதையரவர்கள் அம்பலவாணர் செம்பொற்றிருவடி நீழலெய்தியதைப் பத்திரிகைகள் வாயிலாகவும் தங்கள் கடித மூலமாகவும் தெரிந்து அளவிறந்த துயரெய்தினோம்.

அவர்கள் வலம்புரி முத்தின் குலம்புரி பிறப்பும், வான்யாறன்ன தூய்மையும், வான்யாறு நிலம்படர்ந்தன்ன நலம்படர் ஒழுக்கமும், திங்கள் அன்ன கல்வியும், திங்களொடு ஞாயிறன்ன வாய்மையும், யாவதும் அஃகா அன்பும், வெஃகா உள்ளமும், துலை நாவன்ன நடுநிலையும் உடையராய் இமிழ் கடலுலகில் தமிழ் நிலமெங்கும் தலைசிறந்த தமிழ்ப்புலவர் குழுவில் தலைமணியாக விளங்கினார்கள் என்பது தமிழுலகம் நன்கறிந்த தொன்று.

60 ஆண்டுகளின் மேலாகப் பன்னூறு

அசல்

2.5.1942 சா. சாமிநாதன்

அசல் – 1

உ

*Sanmarga Sabah,* (௨)

MELASIVAPURI.

PUDUKOTAH.

மாணவர்க்குக் கல்வி பயிற்றுவித்தும் நாளா
ளுக்கும் சலியாமுயற்சியுங் கொண்டு பல்லிடங்
கட்குஞ் சென்று ஏடுகள் தேடிக் கொணர்ந்து
இரவு பகலாக ஆராய்ந்து சங்க இலக்கிய
இலக்கணங்களை அரும் பொருளாராய்ச்சிக்
குறிப்புக்களுடன் வெளியிட்டும், தெளிவு
ம் இனிமையும் நிறை உரைநடை நூல்கள்
பல ஆக்கியும் தெய்வத் தமிழ்மொழியின்
ஆக்கங் கருதிச் செய்த செயல்கள்
யாவரும் விழைந்து பாராட்டுந் தகையன
வாம்:

தமிழ் நூல்களையாராய்ந்து வெளியிடு
ம் திறன் இருகாலும் எவரிடத்தும்அமையாது
இவர்கள் பாலமைந்த ஓர் தனிப்பெருஞ் சிறப்
பாகும். சங்கத் தமிழ் நூல்களெல்லாம் மண்
நீர், நெருப்புக்களாகிய பகைகளுக்கிரையாகி
ப் போகாமல் என்றும் நின்று நிலவும் வண்
ணம் செய்த பெருமை இவர்களுக்கே உரிய
தாகும். இவர்கள் முயற்சியின் மேல் தமிழ்
மொழி வளர்ச்சியும், தமிழர்தம் வாழ்வும்
நின்றியொழியுமென்பது ஒருதலை.

தமிழ்மொழி நல்வளர்ச்சியடைதற்

அசல்

2.5.1942 சா. சாமிநாதன்

அசல் -1

(3)

உரிய இந்நாளில் தமிழ் மொழியின் ஆக்கங் கருதிப் பல்லாற்றானும் அருந்தொண்டாற் றிய இப்பெரியார் பிரிவு தமிழுலகத்திற் கும் பெருந்துயரத்தையும், ஈடுசெய்யமுடி யாத நஷ்டத்தையும் விளைப்பதாகும்.

எங்கள் சபையின் பால் பேரன்பு பூண்டு அதன் 6, 16, 25-ஆம் ஆண்டு விழாக்களில் தலைவராக வீற்றிருந்து பொருளுரைகளை வழங்கியமையும் இன்னதையெலாம் கனிதுரும்பச் செய்த நன்றியை யாம் என்றும் மறக்ககில் லேம்.

தமிழன்னையின் தலைக்குறைபோதும் இத்தலைமகனாரைப் பிரிய நேர்ந்தது. இப்பெரி யாரின் நல்லுயிர் ஆறணிசெஞ்சடைப்பெரு மான் திருவடிகளில் என்றும் மாறிலா இன்பம் எய்துவதாக.

எங்கள் வருத்தத்தைக் குடும்பத் தார்க்குத் தெரிவிக்க,

[illegible signature]

President

அசல்

2.5.1942 கி. சாமிநாதன்

அசல் –1


10

Sri. V. Sundaram Iyer Avl.,

45. Sannidhi Street

Tirukalukundram

Chenglepet Dt

அசல்

2.5.1942 சா. சாமிநாதன்

அசல் -1

